04.08.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கீழ்பவானி கால்வாயில் தண்ணீர் திறப்புத் தேதியை முன்கூட்டியே அறிவிக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

கீழ்பவானி கால்வாயில் தண்ணீர் திறப்புத் தேதியை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்று கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, இச்சங்கத்தின் தலைவர் செ.நல்லசாமி திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை: சம்பா, தாளடி சாகுபடிக்கு மேட்டூர் அணை ஆகஸ்ட் 9-ஆம் தேதி திறக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதைப் பின்பற்றி கீழ்பவானிப் பாசனத் தண்ணீர்த் திறப்புத் தேதியை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். தமிழ்நாட்டில் மேட்டூர் அணையை அடுத்து கட்டப்பட்டிருக்கும் பெரிய அணை கீழ்பவானி அணை. இதன் மொத்தக் கொள்ளளவு 32.8 டி.எம்.சி. அணையில் இருக்கும் நீர் அளவு 19 டி.எம்.சி ஆகும். நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் மின் அணைகளின் மொத்தக் கொள்ளளவு 18.3 டி.எம்.சி. இன்றைய தேதியில் பல அணைகள் முழுக் கொள்ளளவில் உள்ளன.

ஆகவே, நடப்புப் பாசனப் பருவத்தில் அட்டவணைப்படி ஆகஸ்ட் மாதம் முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க இயலும். தண்ணீர் திறப்புத் தேதி அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறான அறிவிப்பு, விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களைத் தேடுவதற்கும், முன்கூட்டியே நிலத்தைத் தயார் செய்வதற்கும், வங்கிக் கடங்களை வாங்குவதற்கும், திட்டமிட்டுச் செயல்படுவதற்கும் ஏதுவாக இருக்கும். இந்த ஆண்டு ஏப்ரல் 30-ஆம்

தேதி பாசனக் கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. தண்ணீர் இல்லாத காலத்தில் மேற்கொள்ளப்படும் கால்வாய் மராமத்துப் பணிகளை இதுவரை பொதுப்பணித்துறை தொடங்கவே இல்லை.

மாவட்ட அளவில் நடைபெறும் விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் ஆண்டுதோறும் இதை நினைவுபடுத்தியும் பொதுப்பணித்துறை கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

**ஈரோட்டில் பலத்த மழை**

ஈரோடு நகரில் திங்கள்கிழமை பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெப்பம் அதிகமாக காணப்படுகிறது. இதனால், மாநகராட்சி உள்பட பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், கிணறுகளில் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்நிலையில், திங்கள்கிழமை பலத்த மழை பெய்ததால் ஈரோடு நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கூட்டுறவு சங்கங்களில் 11,900 டன் உணவு தானியம் சேமிப்பு வசதி**

தேனி மாவட்டத்துக்கு உள்பட்ட 90 கூட்டுறவு சங்கங்களில் மொத்தம் 11 ஆயிரத்து 900 டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதியுள்ள ஊரக கிட்டங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து மாவட்ட கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கூறியது: மாவட்டத்துக்கு உள்பட்ட 90 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் நபார்டு வங்கி மூலம் ஊரக உள்கட்டமைப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ், மொத்தம் 11 ஆயிரத்து 900 டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதியுள்ள கிட்டங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக கிட்டங்களில் உணவு தானியங்களை இருப்பு வைக்கும் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2015-16-ம் ஆண்டில் இதுவரை 187 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.2.10 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஊரகக் கிட்டங்கிகளுக்கு தேசிய கிட்டங்கிகள் மேம்பாட்டு கண்காணிப்பு அமைப்பு தரச் சான்றிதழ் வழங்குகிறது. மாவட்டத்தில் இதுவரை 6 கூட்டுறவு சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ள ஊரகக் கிட்டங்கிகளுக்கு தரச்சான்று பெறப்பட்டுள்ளது. 29 சங்கங்களில் உள்ள கிட்டங்கிகளுக்கு தரச்சான்று பெற முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தரச்சான்று பெற்ற ஊரக கிட்டங்கிகளில் இருப்பு வைக்கப்படும் தானியங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான 14 சதவிகிதம் வட்டியில், விவசாயிகள் 7 சதவிகிதம் வட்டி செலுத்தினால் போதுமானது. நபார்டு வங்கி மூலம் விவசாயிகள் சார்பில் 7 சதவிகிதம் வட்டி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது என்றனர்.

**"நேரடி நெல் விதைப்பில் களை மேலாண்மை அவசியம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் களைகளைக் கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டுமென வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் (பொ) ரெ. சதானந்தம், உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் வ. சாந்தி, வேளாண் அலுவலர் பொ. செல்வி ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி மேட்டூர் பாசனப் பரப்புப் பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம் வட்டாரங்களிலும் அரிமளம் வட்டாரம் ஏம்பல் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

நேரடி நெல் விதைப்பில் களைகள் மிகுந்து வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். நேரடி நெல் விதைப்பில் குறைந்தது 50 நாள்கள் வரை

களைகள் இல்லாத சூழல் இருக்க வேண்டும். களைகள் மிகுதியாக இருந்தால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும்.

எனவே, விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் களை மேலாண்மையில் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். உழவியல் முறைகள் மூலம் களை மேலாண்மை செய்ய வயலை நன்றாகச் சமன் செய்த பின் விதைக்க வேண்டும். தொழு உரமிடும்போது மக்காத தொழு உரம் அல்லது சாணம் நிலத்தில் இடுவதால் பலவிதமான களைகளின் விதைகள் பாவிவிடுகின்றன. எனவே, நன்கு மக்கிய தொழு உரம் அல்லது சாணம் இடவேண்டும். வரப்பு வாய்க்கால்களில் களை வராமல் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். நேரடி நெல் விதைப்பு செய்த வயலில் பயிரின் தொடக்கக் காலத்தில் போதிய அளவு தழைச்சத்து இடுவதால் பயிர் வேகமாக வளர்ந்து களைகளின் பாதிப்பைக் குறைத்துவிடுகிறது.

களைக்கொல்லிகள் மூலம் களை மேலாண்மை செய்ய நெல் விதைத்த 3 முதல் 5 நாள்களுக்குள் ஏக்கருக்கு பென்டிமெத்தலின் 1 லிட்டர் அல்லது பிரிடிலாக்குளோர் 450 மில்லி. அல்லது விதைத்த 5 முதல் 6 நாள்களுக்குள் பைரசோசல்பூரான் ஈத்தைல் களைக்கொல்லி ஏக்கருக்கு 80 கிராம் எனும் அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து, வயலில் போதுமான ஈரம் இருக்கும்போது கைத்தெளிப்பான் மூலம் பின்னோக்கி நகர்ந்து கொண்டே தெளிக்கவும். வயலில் ஈரம் மிகுதியாக இருக்கும் நிலையில் களைக் கொல்லியை 20 கிலோ மண்ணுடன் கலந்து சீராகத் தூவவும்.

ஏக்கர் ஒன்றுக்கு 100 முதல் 120 மி.லி. பிஸ்பைரிபாக் சோடியம் 10 எஸ்.சி. களைக்கொல்லியையோ மெட்சல்பியூரான் மீத்தைல் மற்றும் குளோரிமீயூரான் ஈத்தைல் ஆகியவற்றைக் ஒன்றாகக் கலந்து ஏக்கருக்கு 8 கிராம் எனும் அளவில் 200 லிட்டர் நீரில் கலந்த களைக்கொல்லியையோ கைத்தெளிப்பான் மூலம் களையின் 2 - 4 இலைப் பருவத்தில் தெளித்து புல், கோரை மற்றும் சில அகன்ற இலைக் களைகளைக்

கட்டுப்படுத்தலாம்.களைக்கொல்லி பயன்படுத்தும்போது நெற்பயிருக்கு ஏற்ற பரிந்துரை செய்யப்படும் களைக்கொல்லியை மட்டும் சரியான அளவில் தெளிக்க வேண்டும்.களைக்கொல்லி தெளித்த பின் வயலில் 2 நாள்களுக்கு நடக்கக் கூடாது. நடந்தால் களைக்கொல்லி கால்களில் ஒட்டிக்கொள்ளும் இடத்தில் களைகள் வளர உதவும். களைக்கொல்லி தெளிக்கும்போது மண்ணில் ஈரம் இருப்பது கட்டாயம். களைக்கொல்லியைத் தெளித்த பின் தெளிப்பானை நன்கு கழுவுதல் வேண்டும் அல்லது களைக்கொல்லி தெளிப்பதற்கென தனிக் கைத்தெளிப்பான் பயன்படுத்துதல் வேண்டும்.

இந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றிக் களைகளைக் கட்டுப்படுத்துவதால் சம்பா நேரடி நெல் விதைப்பில் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

**காவிரிப்படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க கோரிக்கை**

காவிரிப்படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தஞ்சாவூரில் மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு மற்றும் அதன் தோழமை அமைப்புகளின் கலந்தாய்வுக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு தலைமை ஒருங்கிணைப்பாளர் த. ஜெயராமன் தலைமை வகித்தார். கூட்டம் முடிந்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

திருவாரூர் மாவட்டத்தில் அண்மையில் முந்தானூர், மணக்கால் உள்ளிட்ட பல கிராமங்களில் ஓஎன்ஜிசி நிறுவனம் மேற்கொண்ட குழாய் பதிப்புப் பணிகளை மக்களே தடுத்தி நிறுத்தியது பாராட்டுக்குரியது.

இதுவரை பதிக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயுக் குழாய்களால் காவிரிப்படுகை வீணாகிவிட்டது. ஆகையால் இனிமேல் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களாக இருந்தாலும் பெட்ரோல், எரிவாயு எடுக்க அனுமதிக்கக் கூடாது. காவிரிப்படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண்

மண்டலமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும். காவிரிப்படுகையைக் காக்கும் வகையில் மக்கள் சந்திப்பு இயக்கம் ஆகஸ்ட் 15 முதல் 23-ஆம் தேதி வரை திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறுகிறது என்றார்.

கூட்டமைப்பின் தலைமை ஆலோசகர்கள் கோ. திருநாவுக்கரசு, மருத்துவர் இரா. பாரதிசெல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாய நிலங்களில் மண்ணரிப்பு: மண்வள ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை

ஊட்டி: 'நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் ஆண்டுக்கு, 39 டன் அளவுக்கு மண் அரிப்பு ஏற்படுகிறது' என, தேசிய மண்வள ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில், 18 ஆயிரத்து 285 ஏக்கர் பரப்பளவில் பலவகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. 'இந்த தோட்டங்களில், சமீப காலமாக மண்ணரிப்பு அதிகரித்து வருகிறது' என, தேசிய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டி மையத்தினர் கண்டறிந்து உள்ளனர்.தேசிய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டி மைய முதன்மை விஞ்ஞானி மணிவண்ணன் கூறியதாவது:சரிவான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்டங்கள், வரப்புகள் அமைக்கப்பட வேண்டும். படிமட்டங்களில், புற்கள், தாவரங்களை நட்டு வைப்பதன் மூலம், மண்ணரிப்பு தடுக்கப்படும். 1960ம் ஆண்டுகளில், நீலகிரியில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்டங்கள் அமைக்க, சிறப்பு நிதி கூட ஒதுக்கப்பட்டது. தற்போது விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் படிமட்டங்களை

அமைத்துக் கொள்வதில்லை. உருளைக் கிழங்கு, கேரட் தோட்டங்களில், ஆண்டுக்கு இரு முறை சாகுபடி செய்வதன் மூலம், ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில், 39 டன்னுக்கு மேல் மண் அரிக்கப்படுகிறது. விவசாய நிலத்தின் மேல் மண்ணில் உள்ள நைட்ரேட், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய சத்துகள் இழக்கின்றன. இதனால் மண் வேகமாக மலடாகி வருகிறது.விவசாய நிலத்தில் படிமட்டம் அமைக்க மானிய உதவிகளை, விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டும் என, பரிந்துரை வழங்கியுள்ளோம்.இவ்வாறு, அவர் கூறினார்.

## காவிரி நீர்திறப்பு 2 ஆயிரம் கன அடியாக குறைப்பு

மேட்டூர் : டெல்டா மாவட்ட காவிரி நீர்பிடிப்பு கரையோர மக்கள், ஆடிப்பெருக்கு பண்டிகையை கொண்டாட, கடந்த 26ம் தேதி முதல் காவிரி ஆற்றில், வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. நேற்று(03-08-15) பண்டிகை நிறைவடைந்ததையொட்டி, நேற்று மாலை முதல் வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது. இன்று(04-08-15) அணையின் நீர்மட்டம் 93.27 அடியாவும், நீர் இருப்பு 60.133 டி.எம்.சி.,யாகவும், நீர்வரத்து வினாடிக்கு 3,318 கன அடியாகவும் உள்ளது. அணையின் நீர்திறப்பு குறைந்ததால், அணை மின் நிலையம், சுரங்கமின் நிலையம், காவிரிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள மின்நிலையங்களின் மின்உற்பத்தி படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி, வரும் 9ம் தேதி மாலை 3 மணியிலிருந்து 4 மணிக்கு மீண்டும் தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

## 2050ல் உணவு அளிக்கும் நாடாக இந்தியா : கலாம் லட்சிய விதைப்பு கூட்டத்தில் உறுதி



ராஜபாளையம்: 2050ல் உலக நாடுகளுக்கு உணவு அளிக்கும் நாடாக இந்தியா உருவாகும் என,முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் கூறினார். ராஜபாளையம் ஏ.கே.டி.தர்மராஜா பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடந்த அப்துல் கலாமின் லட்சிய கனவுகள் விதைப்பு கூட்டத்தில் அவர் பேசியதாவது: இது இரங்கல் கூட்டம் அல்ல. அப்துல் கலாம் கனவுகளை விதைக்கும் கூட்டம். சென்னை, லண்டன், ஆக்ஸ்போர்டு, அமெரிக்கா போன்ற பல பகுதிகளில் நடக்க இருக்கிறது. பள்ளியில் நடைபெறுவது இது தான் முதல்முறை.இந்தியாவில் தெற்கில் பிறந்து, மேற்கில் ஆராய்ச்சி செய்து ஏவுகணை உருவாக்கினார், வடக்கில் ஜனாதிபதி ஆனார். கிழக்கில் மாணவர்கள் மத்தியில் அப்துல் கலாமின் மூச்சுக் காற்று பிரிந்தது. மீண்டும் தெற்கில் விதைக்கப்பட்டு உள்ளார். அவரது உடலை உலக தலைவர்கள் வந்து செல்லும் டில்லியில் அடக்கம் செய்தால் தேசிய மரியாதை கிடைக்கும் என ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் ராமேஸ்வரத்தில் நடந்தது. அங்கு தலைவர்கள் வந்தனர்.இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் கூட்டம் வந்தது."மாணவ, மாணவிகளை

சந்தித்து லட்சிய கனவு ஏற்றினால் 2020ல் அவர்கள் உயர்பதவியில் இருப்பார்கள். சூரிய காந்தி போல நாடு வளர்ச்சி பெறும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மனதில் பாகுபாடு இருக்காது. அவர்களிடம் லட்சியத்தை விதைத்தால் வளமான நாடு உருவாகும்"என அப்துல் கலாம் கூறுவார். 2050ல் உலக நாடுகளுக்கு உணவு அளிக்கும் நாடுகளாக இந்தியா, சீனா இருக்கும். தற்போதே நதிநீர் இணைப்பிற்கு செயல்பட துவங்கி விட்டது. நாமும் நதிநீர் இணைப்பு செய்யவேண்டும், என்றார்.ஏ.கே.தர்மராஜா கல்வி தர்ம ஸ்தாபன மேனேஜிங் டிரஸ்டி பலராம் ராஜா வரவேற்றார். அப்துல் கலாமின் லட்சிய கனவு குறித்து யுனைடெட் விஷன் 2020 அமைப்பின் தலைவர் திருச்செந்தூரான் விளக்கினார். மாணவிகள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி எடுத்தனர்.--

**பீகார்: மேலும் 11 நூடுல்ஸ்களுக்கு தடை**

பாட்னா : அதிக அளவில் வேதிப்பொருட்கள் இருப்பதாக மேகி நூடுல்ஸ்களுக்கு நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதர நூடுல்ஸ்களின் தரம் குறித்து பீகார் மாநில உணவுத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இதில் 11 நூடுல்ஸ்களில் அளவுக்கு அதிகமான ரசாயனம் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து அந்த 11 நூடுல்ஸ்களுக்கும் பீகார் அரசு தடை விதித்துள்ளது.

**தீமை தரும் பூச்சிகளை அழித்து நன்மை தரும் பூச்சிகளை உற்பத்தி செய்து பயிர்களை காக்கலாம்: சாதிக்கும் விவசாயி**

தேனி:விவசாயத்தில் நோய் பாதிப்பு, பூச்சி தாக்குதல் ஆகியவற்றை கட்டுப்படுத்த ரசாயன உரம், பூச்சிமருந்து பயன்படுத்துகின்றனர். ஆனால் பூச்சி மருந்து பயன்படுத்திய சில நாட்களிலேயே மருந்து வீரியம்

குறைந்து நோய் பரப்பும் பூச்சிகள் அதிகரித்துவிடுகிறது. பயிர்களை பாதுகாக்க முடியவில்லை என விவசாயிகள் புலம்பும் நிலை உள்ளது.

குறிப்பாக பயிர்களில் தண்டுபுழு நோய் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் 40 சதவீத மகசூல் குறையும். இப் பாதிப்பில் இருந்து பயிர்களை காக்க இயற்கை வேளாண் முறையில், நோய் ஏற்படுத்தும் பூச்சிகளை அழித்து, நன்மைதரும் பூச்சிகளை உருவாக்கி விற்பனையிலும், விவசாயத்திலும் சாதித்து வருகிறார் தேனி அன்னஞ்சியை @Œர்ந்த பட்டதாரி விவசாயி மோகன்குமார்.

இவர் 2011 ல், 4 ஏக்கரில் ஒருபரு கருனைமுறை தொழில் நுட்பத்தில் கரும்பு நாற்று செய்தார். முதல் வெட்டில் ஏக்கருக்கு 60 டன், 2வது வெட்டில் 75டன் மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளார். கரும்பில் பாதிப்பு ஏற்படுத்தி தண்டுபூச்சிகளை அழிக்கும் இயற்கை முறையில் "டிரைகோகிராம்மா ஜாப்னிக்' எனும் பூச்சிகள் மூலம் நோய் பாதிப்பை தடுத்து உற்பத்தியில் சாதனை படைத்தார். இவர் பெற்ற பலனை மற்றவர்களுக்கும் சென்றடையும் வகையில், தண்டுபுழுவை கட்டுப்படுத்தும் பூச்சிகளை உற்பத்தி செய்கிறார்.

விவசாயி மோகன்குமார் கூறியதாவது: அதிக முட்டையிடும் "கார்சீரா' எனும் பூச்சிகள் மூலம் "டிரைகோகிரம்மா ஜாப்பனிக்' என்ற முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலிருந்து வரும் சிறிய பூச்சிகளை கூண்டு வலைகளில் பராமரித்து அதிலிருந்து மிக நுண்ணிய முட்டைகளை பெறலாம். முட்டைகளை மஞ்சள்நிற அட்டையில் ஒரு கியூபிக் மீட்டர் அளவில் சிறிய அட்டையில் 15 ஆயிரம் முட்டைகள் ஒட்டுகின்றனர். இந்த அட்டைகளை ஐந்து நாட்களுக்குள் தண்டு புழு பாதித்த பயிரில் கட்டவேண்டும். அட்டையில் ஒட்டிய முட்டைகள் சூரிய வெப்பத்தில் 2 மணிநேரத்தில் பூச்சியாக மாறிவிடும். இப் பூச்சிகள் பயிர்களுக்கு சேதம்

விளைவிக்கும் தண்டு புழுக்களை உணவாக எடுத்து, அழித்து, பயிர்களுக்கு நன்மை தரும் முட்டைகளை செடியில் வைத்துவிடும்.

கரும்பில் தண்டு பூச்சி பாதிப்பு இருந்தால் நடவு செய்த 4 வது மாதத்தில் 15 நாள் இடைவெளியில் 3 முறை மஞ்சள் நிற அட்டை கட்டினால் நோய் பாதிப்பு இருக்காது. இதுபோன்ற நன்மை செய்யும் பூச்சிகள், கரும்பு, காய்கறி சாகுபடி, காப்பி, ஏலம் பயிர்களில் தண்டுபுழு பாதிப்பை போக்க பெரிதும் உதவுகிறது. பண்ணையில் நாள்ஒன்றுக்கு 120 சிசி பூச்சிகள் உற்பத்தி செய்கிறேன். இதை சர்க்கரை ஆலைகள் அதிகம் கொள்முதல் செய்கிறது. ஒரு அட்டை ரூ.35 விலைக்கு விற்கப்படுகிறது. பயிரை தாக்கும் மற்ற நோயான மாவு பூச்சி, கத்தாளை பூச்சி ஆகியவற்றை ஒழிக்க இயற்கை பூச்சிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன் என்றார். மேலும் விபரங்களுக்கு...99448 65516.

**மரவள்ளி பயிர்கள் சாகுபடி பரப்பு அதிகரிப்பு :தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்**

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மரவள்ளி பயிரிடுவதல் மீண்டும் ஆர்வம் காட்டி வருவதால் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.தியாகதுருகம் பகுதியில் நெல், கரும்பு அதிக அளவில் நன்செய் பயிராக சாகுபடிசெய்யப்படுகிறது. இவ்விரு பயிர்களுக்கும் தண்ணீர் தடையின்றி கிடைத்தால் மட்டுமே பலன் ஈட்ட முடியும். கடந்த சில ஆண்டுகளாக பருவமழை குறைந்து நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நெல், கரும்பு சாகுபடி செய்தவர்களுக்கு கடும் சிக்கல் ஏற்பட்டது. பல இடங்களில் நெல் பயிரிடுவதை விவசாயிகள் குறைத்துக்கொண்டனர். ஆண்டு முழுவதும் கரும்புக்கு தண்ணீர் தேவைப்படுவதால் கோடை காலத்தில் நீர் கிடைக்காமல் பயிர்கள் கருகுவதை தடுக்க முடியாமல் நஷ்டம் ஏற்பட்டது.இதனால் குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் பயிரான மரவள்ளி சாகுபடி செய்வதில் விவசாயிகளின் ஆர்வம் மீண்டும் திரும்பியுள்ளது.ஆண்டு

பயிரான இதற்கு தற்போது சிறந்த விலை கிடைத்து வருகிறது. பராமரிப்பது எளிதாக இருப்பதாலும், ஆத்தூர் பகுதியில் உள்ள "சேக்கோ பாக்டரி'யில் இருந்து நேரடியாக கிழங்கை கொள்முதல் செய்து கொள்கின்றனர்.கம்பெனி சார்பில் ஆட்களை கொண்டு அறுவடை செய்து பணத்தை கொடுத்து விடுவதால் வீண் அலைச்சல் இன்றி பயனடைய முடிகிறது.மைதா, ஜவ்வரிசி, சேமியா, ஸ்டார்ச், கால்நடை தீவனம் ஆகியவை தயாரிப்புக்கு மரவள்ளி கிழங்கு மாவு முக்கிய மூலப்பொருளாக பயன்படுவதால் இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் இதற்கு சிறந்த விலை கிடைத்து வருகிறது.

தற்போதய நிலவரப்படி 65 கிலோ எடையுள்ள மரவள்ளி கிழங்கு மூட்டை 400 ரூபாயக்கு விற்பனையாகிறது. கடந்த ஆண்டு அதிக பட்சமாக 600 ரூபாய் வரை விலை போனது.கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் கிழங்கு விலை வீழ்ச்சியடைந்ததால் பலரும் கரும்பு பயிருக்கு தாவினர். தற்போது கரும்பு பயிருக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு கருகுவதால், தொடர் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.இதையடுத்து மீண்டும் மரவள்ளி கிழங்கு சாகுபடி பக்கம் கவனம் திரும்பியுள்ளது. சீராக தண்ணீர் பாய்ச்சி, ஊட்டச்சத்து உரங்களை இட்டு பராமரித்தால் ஏக்கருக்கு 200 மூட்டை வரை மகசூல் கிடைக்கிறது.நெல், கரும்பை விட கூடுதல் லாபம் கிடைப்பதால் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பலர் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்வதில் ஆர்வம் திரும்பியுள்ளது.

**நாமக்கல்லில் திடீர் கனமழை: குளிர்ந்த காற்றால் மகிழ்ச்சி**

நாமக்கல்:நாமக்கல், சேந்தமங்கலம், கொல்லிமலையில் நேற்று மாலை கனமழை பெய்ததால், மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.நாமக்கல் மாவட்டத்தில், நேற்று காலை முதல் வெயில்

வாட்டி வதைத்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது. பலரும் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள் முடங்கினர். இந்நிலையில், நேற்று மாலை, 5.30 மணிக்கு திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து கனமழை பொழியத்துவங்கியது. எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அமைதியாக மழை பெய்தது. விட்டு விட்டு பெய்த மழை, இரவு, 9 மணி வரை தொடர்ந்தது. அதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பள்ளங்களில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது.

பகலில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், கொல்லிமலை, சேந்தமங்கலம் பகுதியில் கனமழையும், மோகனூர், ராசிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழையும் பெய்தது. திடீரென பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நீர்வரத்து சரிவால் மேட்டூர்அணை நீர்மட்டம் குறைந்தது**

மேட்டூர்:நீர்திறப்பை விட, நீர் வரத்து குறைந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று முதல் சரிய துவங்கியுள்ளது.கர்நாடகாவின், கபினி அணை உபரிநீர், கே.ஆர்.எஸ்., அணை நீர் தொடர்ச்சியாக வந்ததால், கடந்த, ஜூன், 26ல், 74.550 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று முன்தினம், 96.380 அடியாகவும், 36.740 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 60.250 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது.ஆடிப்பெருக்கு பண்டிகைக்காக கடந்த, சில நாட்களாக காவிரியில் வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. இந்நிலையில், வினாடிக்கு, சராசரியாக, 10 ஆயிரத்து, 500 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று முன்தினம், 7,264 கனஅடியாகவும், நேற்று, 5,306

கனஅடியாகவும் சரிந்தது. காவிரியில் வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் வெளியேற்றும் நிலையில், நீர்வரத்து, 5,306 கனஅடியாக சரிந்ததால், நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 96.300 அடியாகவும், நீர் இருப்பு, 60.151 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் சரியும் வாய்ப்பு உள்ளது.

**வாழைக்கு இன்சூரன்ஸ் அறிமுகம்**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன் முறையாக வாழைப் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கமுதி அருகே உள்ள கீழராமந்தி, மேலராமந்தி, நீராவி, என்.கரிசல்குளம், முஷ்டக்குறிச்சி, வளநாடு, மண்டல மாணிக்கம் ஆகிய கிராமங்களில் 250 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. பலத்த காற்று, மழையால் பாதிக்கப்படும் வாழை பயிருக்கு இன்சூரன்ஸ் திட்டம் அறிமுகப்படுத்த வேண்டும், என கலெக்டர் நந்தகுமாரிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.அதன்படி, முதன் முறையாக கமுதி மேற்கு பிர்காவிற்கு மட்டும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்சூரன்ஸ் தொகை ஒரு ஏக்கருக்கு 3 லட்சத்து 22 ஆயிரத்து 260 ரூபாய். இதற்கான பிரிமியத் தொகை ரூ.24 ஆயிரத்து 140. விவசாயிகள் செலுத்தவேண்டியது ரூ.12 ஆயிரத்து 85. அரசு மானியம் ரூ.12 ஆயிரத்து 85. பிரிமிய தொகையை செப்., 30 க்குள் கூட்டுறவு கடன் சங்கம் அல்லது வங்கிகளில் செலுத்தவேண்டும். சிறு, குறு விவசாயிகள் மத்திய, மாநில அரசுகள் வழங்கும் 55 சதவீத மானியத்தொகையான ரூ.13 ஆயிரத்து 294 போக, மீதமுள்ள ரூ.10 ஆயிரத்து 876 யை வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலத்துக்கான அடங்கல், வி.ஏ.ஓ., சான்றிதழ் இணைத்து, பிரிமியம் செலுத்தவேண்டும்.

**விருதுநகரில் மழை**

விருதுநகர்:விருதுநகரில் கடந்த சில நாட்களாக கோடையை மிஞ்சும் அளவிற்கு வெயில் வாட்டி எடுத்ததால் மக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில் நேற்று பிற்பகல் 2.45 மணிக்கு மழை பெய்யத்துவங்கியது. முக்கால் மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த மழையால் சாலைகள், தாழ்வான பகுதிகளை நீர் சூழ்ந்தது. பழையபஸ்ஸ்டாண்டிற்குள் மழைநீர் தேங்கியதால் பயணிகள் அவதிப்பட்டனர். இம்மழையால் ஓரளவு பூமி குளிர்ந்து வெப்பம் தணிந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**சம்பா சாகுபடிக்காக 3,824 டன் டி.ஏ.பி. உரம் ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயிலில் வந்தது**




தஞ்சை,

கும்பகோணத்துக்கு சம்பா சாகுபடிக்காக 3,824 டன் டி.ஏ.பி. உரம் ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயிலில் வந்தது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் குறைந்த அளவே நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் சம்பா சாகுபடி அதிக அளவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான விதைநெல், உரங்கள் வரவழைக்கப்பட்டு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சம்பா சாகுபடிக்காக வருகிற 9-ந்தேதி மேட்டூர் அணை திறந்து விடப்படுகிறது. இதையொட்டி விவசாயிகள் தற்போது சம்பா சாகுபடிக்கான ஆயத்த பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். 3,824 டன் டி.ஏ.பி. உரம் அதன்படி ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து 57 ரெயில் பெட்டிகளில் 3,824 டன் டி.ஏ.பி. உரம் வந்தது. இதில் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு 29 சரக்கு ரெயில் பெட்டிகளில் 1,914 டன் உரமும், கும்பகோணத்திற்கு 28 பெட்டிகளில் 1,910 டன் உரமும் வந்தன. இந்த உரங்கள் ரெயிலில் இருந்து லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டன. மேலும் தனியார் கடைகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டன. சம்பா சாகுபடிக்காக இந்த உரங்கள் தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு தங்குதடையின்றி வினியோகம் செய்யப்பட உள்ளது என மண்டல மேலாளர் செந்தில்குமார் தெரிவித்தார்.

**திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் மீன் விற்பனை மந்தம் தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சி**



திருப்பூர்,

திருப்பூர் தென்னம்பாளையம் மீன் மார்க்கெட்டில் மீன்கள் விற்பனை மந்தமாக இருந்தது. தக்காளி விலையில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மீன் விற்பனை மந்தம் திருப்பூர் தென்னம்பாளையத்தில் உள்ள மீன் மார்க்கெட்டுக்கு தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. அந்த வகையில் நேற்று மார்க்கெட்டுக்கு 50 டன் மீன் விற்பனைக்கு வந்திருந்தது. மீன்கள் வரத்து அதிகரித்ததாலும் வியாபாரம் மந்தமாக இருந்தது.

கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.600–க்கு விற்ற வஞ்சிர மீன் நேற்று ரூ.650–க்கும், ரூ.300–க்கு விற்ற விலாமீன் ரூ.350–க்கும், ரூ.200–க்கு விற்ற அயிலை மீன் ரூ.180–க்கும், ரூ.70–க்கு விற்ற மத்தி மீன் ரூ.100–க்கும், ரூ.300–க்கு விற்ற பாறை மீன் ரூ.320–க்கும், ரூ.600–க்கு விற்ற வாவல்

மீன் ரூ.620–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

விலை குறைய வாய்ப்பு ஆடி மாதத்தில் வரும் ஆடிவெள்ளி, ஆடிஅமாவாசை, ஆடிகிருத்திகை, ஆடிபூரம், ஆடிதபசு போன்ற முக்கியமான விசேஷ நாட்கள் காரணமாக பொதுமக்கள் அசைவ உணவு சாப்பிடுவதை தவிர்த்து விடுவது வழக்கம். இதனால் மார்க்கெட்டில் மீன் விற்பனை குறைவாகவே இருக்கிறது. கேரள மாநிலத்தில் மீன் பிடிக்க போடப்பட்டுள்ள தடை நீக்கப்பட்டுவிட்டதால், கடந்த 1–ந்தேதி முதல் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க தொடங்கி விட்டனர். இன்னும் 2 நாட்களில் கேரளாவில் இருந்து அதிகளவில் மீன்கள் விற்பனைக்கு வர உள்ளதால், மீன் விலை குறையும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சி

திருப்பூர் தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டுக்கு நேற்று 25 டன் தக்காளி விற்பனைக்கு வந்திருந்தது. வரத்து அதிகமாக உள்ளதால் தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் 14 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.70 முதல் ரூ.80–க்கு விற்பனையானது. ஆனால் நேற்று தக்காளி பெட்டி ரூ.40 முதல் 50–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், கடந்த சில தினங்களாக தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விளைச்சல் அதிகமாக இருந்ததாலும் விலை குறைவாக இருப்பதால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். தோட்டத்தில் இருந்து தக்காளிகளை பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு வருவதற்கான செலவுக்கு கூட வருமானம் கிடைப்பதில்லை. தக்காளிகளை செடிகளில் இருந்து பறிக்காமல் விட்டாலும் வீணாகி விடும் என்றனர்.

**குட்டைபோல காட்சியளிக்கும் வீடூர் அணை தூர்வார விவசாயிகள் கோரிக்கை**



மயிலம்

தண்ணீர் குறைந்து குட்டைபோல காட்சியளிக்கும் வீடூர் அணையை தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீடூர் அணை திண்டிவனம் தாலுகா மயிலம் ஒன்றியத்தில் வீடூர் கிராமம் உள்ளது. மழை காலங்களில் பல்வேறு பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் வீடூர் கிராமத்தின் வழியாக வடிந்து சென்று புதுச்சேரி கடலை சென்றடைந்தது. இதை அறிந்த அப்போதைய தமிழக முதல்–அமைச்சர் காமராஜர் 1959–ம் ஆண்டு வீடூர் அணையை கட்டினார். தற்போது இந்த அணை 8 கோடியே 59 லட்சத்து 16 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படுகிறது. மழைக்காலங்களில் இந்த அணைக்கு செஞ்சி, மேல்மலையனூர் பகுதிகளில் உள்ள வராக நதி மற்றும் தொண்டூரில் அமைந்துள்ள தொண்டி ஆற்றில் இருந்து தண்ணீர் வந்த வண்ணம் உள்ளது.

<u>3,200 ஏக்கர் பாசனம்</u>

இந்த அணையின் மூலம் தமிழகத்தில் 2 ஆயிரத்து 200 ஏக்கரும், புதுச்சேரி மாநிலத்தில் ஆயிரம் ஏக்கர் என மொத்தம் 3 ஆயிரத்து 200

ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையில் இருந்து ஆண்டுதோறும் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் மொத்தம் 135 நாட்கள் விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு போதிய பருவ மழை பெய்யாததால் வீடூர் அணை நிரம்பவில்லை. குறைவாக பெருகி இருந்த தண்ணீரும் விவசாயத்திற்காக முன்கூட்டியே திறந்து விடப்பட்டது. இதனால் வீடூர் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்தது. இதனால் தற்போது வீடூர் அணையில் தண்ணீர் வற்றி போய் குட்டையாக உள்ளது. தூர்வாரப்படுமா?

வீடுர் அணையில் தற்போது தண்ணீர் குறைவாக இருப்பதற்கு போதிய மழையின்மை ஒரு காரணமாக இருந்தபோதும், மற்றொரு முக்கியமான காரணமும் ஒன்று உள்ளது. அதாவது அணையில் மணல் மேடுகள் அதிகரித்து முட்செடிகள் வளர்ந்துள்ளன. எனவே வீடூர் அணையில் மேடாக உள்ள மண் திட்டுகளை அகற்றி, தூர்வாரினால் மழை காலங்களில் கூடுதல் நீரை சேமித்து வைத்து, விவசாயத்திற்கு பயன்படுத்தலாம். இதன் மூலம் விவசாய உற்பத்தி அதிகரிக்கும் என விவசாயிகள் பலர் தெரிவித்தனர். விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை மாவட்ட நிர்வாகம் நிறைவேற்றுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தினகரன்

**சோலார் மின்சாரம் 40%வரை திறன்**

ஒப்பந்தம் போட்ட அத்தனை ஆண்டுகளுக்கும் ஒரே மாதிரியான முதலீடு தேவைப்படாது; அதுபோல, மின்சார உற்பத்தி திறனும் அதிகரிக்கும் என்பதால் அதற்கு ஒரே விலை தரலாம் என்ற முடிவும் சரியல்ல; இது தான் அதானி ஒப்பந்தத்தில் சிக்கலை ஏற்படுத்தும் பிரச்னை. ஒவ்வொரு ஆண்டும் மின்சார உற்பத்தி திறன் பெருகும். முதலில் 11 சதவீத திறன் கிடைத்தால், அடுத்த ஆண்டில் 20 சதவீதமாக, மூன்றாம் ஆண்டில் 25 என்று அதிகரித்து நான்கு ஆண்டில் 40 சதவீதத்தை எட்டும் அளவுக்கு திறன் உயரும் என்பது உறுதி. அப்படியிருக்க அதானி ஒப்பந்தம் எந்த அளவுக்கு சரியானதல்ல என்பது போகப்போக தெரிந்து விடும்.

தமிழகத்தில் மழை பெய்யும்

சென்னை: தமிழகத்தில் நிலவிய வெயில் காரணமாக வெப்ப சலனம் உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்தில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்தது. அதிகபட்சமாக நேற்று எண்ணூரில் 50 மிமீ மழை பதிவாகியுள்ளது. மானாமதுரை 30 மிமீ, மேலூர், பொன்னேரி, சிவகங்கை 20 மிமீ, பரமக்குடி, நடுவட்டம், செங்குன்றம், திருமங்கலம், இளையாங்குடி 10 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், வளி மண்டலத்தில் உருவான காற்று சுழற்சி தமிழகம், புதுச்சேரியின் கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதையடுத்து இன்று தமிழகம் புதுச்சேரியில் பரவலாக இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின்

சில இடங்களில் மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

**உளுந்தூர்பேட்டையில் நள்ளிரவில் பலத்த மழை**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த இரண்டு நாட்களாக பகல் நேரங்களில் கடுமையான வெயிலின் தாக்கம் இருந்தது. மாலை நேரங்களில் லேசான மழை பெய்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள எலவனாசூர்கோட்டை, களமருதூர், திருநாவலூர் உள்ளிட்ட கிராமங்களில் பலத்த மழை பெய்தது. காற்று, இடி, மின்னலுடன் பெய்த மழை அதிகாலை வரையில் சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. தொடர்ந்து நேற்று காலை 11 மணி வரையிலும் மேக மூட்டத்துடன் சாரல் மழை பெய்து வந்தது.

நள்ளிரவில் மழை பெய்து வந்தபோது பின்னல்வாடி கிராமத்தில் வசித்து வந்த வீராசாமி மகன் கோவிந்தன் (75) என்ற கல் உடைக்கும் கூலித் தொழிலாளி வீட்டில் இடி விழுந்துள்ளது. இதில் இவரது கூரை வீடு தீப்பிடித்து எரிந்ததுடன் கோவிந்தனும் படுகாயம் அடைந்து மயங்கி விழுந்தார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர். அங்கு அவர் பரிதாபமாக உயிரிழந்தார். மழையினால் மானாவாரியாக மணிலா பயிர் வைத்து இருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**உணவு பாதுகாப்பு துறை உரிமச் சான்று இல்லாத வாகனங்கள் நாளை முதல் கேரளாவுக்குள் நுழைய தடை**

கோவை: உணவு பாதுகாப்பு துறையில் பதிவு செய்யாத தமிழக காய்கறி லாரிகளுக்கு ஆகஸ்ட் 4ம்(நாளை) தேதிக்கு பிறகு கேரளாவிற்குள் நுழைய தடைவிதிக்கப்படும் என்ற அறிவிப்பை தொடர்ந்து வாகன

உரிமச் சான்று பெற சொந்தமாக வாகனம் பயன்படுத்தும் வியாபாரிகள் மற்றும் வாடகை லாரி உரிமையாளர்கள் விண்ணப்பித்து வருகின்றனர்.

காய்கறிகள், பழங்கள் உட்பட பெரும்பாலான உணவு பொருட்கள் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலத்தில் இருந்து கேரளாவுக்கு செல்கிறது. இந்நிலையில், தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து காய்கறிகள், பழங்களை கேரளாவுக்கு கொண்டு செல்லும் வாகனங்கள் உணவு பாதுகாப்பு துறையில் உரிமச் சான்றிதழ் பெற வேண்டும். இது தொடர்பாக கேரள சுகாதாரத்துறை அமைச்சர் சிவகுமார் ஆகஸ்ட் 4ம் தேதிக்குள் உணவு பாதுகாப்பு துறையில் பதிவு செய்து லைசன்ஸ் வாங்காவிட்டால் தமிழகம் உட்பட பிற மாநிலங்களில் இருந்து வரும் காய்கறி லாரிகள் கேரளாவுக்குள் அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து தமிழகத்தில் இருந்து கேரளா செல்லும் காய்கறி லாரி வாகனங்களுக்கு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் உரிமச்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் காரமடை ஐடையம்பாளையம் மார்க்கெட், செஞ்சேரிமலை மார்க்கெட், கிணத்துக்கடவு மார்கெட், நாச்சிபாளையம் மார்க்கெட், பொள்ளாச்சி காந்திமார்க்கெட், கோவை எம்ஜிஆர் மார்கெட் பகுதிகளிலிருந்து தினமும் 300 முதல் 400 டன் வரை காய்கறி மற்றும் பழங்கள் கேரளாவிற்கு வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகிறது. இதில் பல வியாபாரிகள் சொந்தமாக வாகனங்களை இயக்கி வருகின்றனர். இதுதவிர பல வியாபாரிகள் ஒன்ற சேர்ந்து வாடகைக்கு லாரி உள்ளிட்ட வாகனங்களை காய்கறி ஏற்றி செல்ல பயன்படுத்தி வருகின்றனர். கேரள அரசின் அறிவிப்பை தொடர்ந்து கோவை மாவட்ட காய்கறி வியாபாரிகளிடமிருந்து 150 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

இது குறித்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறுகையில், கோவை மாவட்டத்தில் காய்கறி ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் உரிமம் வழங்கப்படுவதுடன் அதனை முறையாக பதிவு செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.ஏனெனில் இந்த உரிமச்

சான்றிழ் காய்கறி எங்கிருந்து கொண்டுவரப்படுகிறது என்ற விபரம் கணினியில் பதிவு செய்யப்படும். எனவே, கேரளாவிற்கு காய்கறிகளை கொண்டு செல்லும் வாகன உரிமையாளர்கள் உரிமம் பெற்றுக்கொள்வது அவசியம். தற்போது, வரை கோவை மாவட்டத்தில் 150 பேரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இவர்களுக்கு இன்று உரிமம் வழங்கப்படும். இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள உணவு பாதுகாப்பு துறை அலுவலகத்தில் உரிய ஆவணங்கள், அடையாள அட்டை, இரண்டு புகைப்படங்களை சமர்ப்பித்து ரூ.100 கட்டணமாக செலுத்தி உரிமத்தை பெற்றுக் கொள்ளலாம். இந்த உரிமம் பெறாதவர்களின் வாகனங்கள் நாளை முதல் கேரளாவிற்கு செல்ல அனுமதி மறுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

## க.பரமத்தி பகுதியில் கோடைமழை கனமாக பொழியாதா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

க.பரமத்தி: க.பரமத்தியில் சாரலுடன் பெய்து வரும் கோடை மழை கனமழையாக பொழிந்தால் மானாவாரி விவசாயம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம் உள்பட 30 ஊராட்சிகள் உள்ளன. அனைத்து பகுதிகளிலும் பருவ மழையை நம்பியே மானாவாரி விவசாயம் செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் கனமழை பெய்தால் மட்டுமே மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, கப்பை, எள், தக்காளி உள்ளிட்ட பயிர்கள் அதிகம் விளையும். கடந்த வருடம் முதல் வழக்கமாக பெய்யக்கூடிய பருவமழை பொய்த்து விட்டது. இதனால் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். இந்த வருடம் வழக்கத்திற்கு மாறாக கோடை வெப்பம் கொளுத்தி வருவதால்

நிலங்களில் உள்ள கிணறுகள் வறண்ட நிலையில் காணப்படுகிறது. இதனால் நிலங்களுக்கே செல்ல முடியாத நிலையில் விவசாயிகள் மனம் நொந்தபடி உள்ளனர். இந்த வருடம் மழை கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டும், ஏமாற்றமே மிஞ்சுகிறது. குறிப்பாக கடந்த 2 தினங்களாகவே அதிகமாக மழை பெய்யும் அளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்பட்டு மழை பெய்யாமல் ஏமாற்றி வருகிறது.

மாறாக வேறு மாவட்டங்களில் பெய்யக்கூடிய மழையின் பாதிப்பால் வெறும் சாரல் மழை மட்டுமே விட்டு விட்டு பெய்கிறது. இதனால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லாத நிலையில் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

இதுகுறித்து விவசாயி கார்த்திகேயன் கூறுகையில், பருவ காலத்தில் அதிகமான மழை கிடைப்பது என்பது வழக்கமான ஒன்று. இதனால் காட்டு வெள்ளாமை சிறப்பாக இருக்கும். ஆனால் இந்த வருடமோ மழை என்பதே இல்லை. ஏதாவது ஒரு இடத்தில் பெய்யக்கூடிய மழை இங்கு சாரலாக கிடைக்கிறது. இதனால் எந்தவிதமான நன்மையும் இல்லை. கனமழை பெய்தால் மட்டுமே மானாவாரி பயிர்கள் விளைவதற்கு வாய்ப்புகள் உண்டாகும். எனவே மழையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம் என்றார்.

**மானாவாரி கடலை சாகுபடியாளருக்கு மானியத்தில் நல உதவிகள் பயன்பெற அழைப்பு**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் மானாவாரியில் கடலை விதைக்கும் கருவிக்கொண்டு விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு மானியத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளதால் இதில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.அரியலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்கு தலைைம வகித்த கலெக்டர் சரவணவேல்ராஜ் பேசியதாவது:இம் மாவட்டத்தில் இம்மாதம்

வரை பெறப்பட்ட மழையை கொண்டு மானவாரிப் பயிர்களான கடலை, உளுந்து, மக்காசோளம், கம்பு மற்றும் சோளம் ஆகியவற்றை பயிரிட இதுவே ஏற்றத் தருணமாகும். மானாவாரியில் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் கடலை விதைக்கும் கருவிக்கொண்டு கடலை மற்றும் ஊடுபயிராக துவரை விதைப்பு செய்ய விதைப்பு மானியம் ரூ.ஆயிரம் எக்டருக்கு பின்னேற்பாக வழங்க தமிழக அரசு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட எண்ணெய் வித்து இயக்கத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் அரியலூர் மாவட்டத்திற்கு பொருள் இலக்கீடாக ஆயிரம் எக்டருக்கு, பின்னேற்பு மானியத்தொகையாக ரூ.10 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இம்முறையில் கடலை விதைப்பு செய்யும் விவசாயிகள் தங்களின் நிலத்தின் சிட்டா, அடங்கல் மற்றும் கடலை விதைக்கும் போது எடுக்கப்படும் புகைப்படம் ஆகியவற்றுடன் பின்னேற்பு மானியத்தொகை பெறுவதற்கான உரிய படிவத்தில் பூர்த்திசெய்து தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் அளித்து முன்னுரிமை அடிப்படையில் பயன்பெறலாம். மேலும், இந்த இலக்கீடானது அரியலூர் வட்டாரத்துக்கு 200 எக்டேரும், ஜெயங்கொண்டம் வட்டாரத்துக்கு 300 எக்டேரும், ஆண்டிமடம் வட்டாரத்துக்கு 300 எக்டேரும், தா.பழூர் வட்டாரத்துக்கு 200 எக்டேரும் வீதம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது.

கடலை விதைக்கும் கருவிக்கொண்டு விதைப்புசெய்ய குறைவான நேரமே ஆகும். கூடிய ஆட்கள் தேவை மற்றும் செலவு குறைக்கப்படுகிறது. பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. சரியான ஆழத்தில் விதைக்கப்படுவதால் நல்ல முளைப்பு திறனும், பயிர் போதுமான இடைவெளியுடன் இருக்கும். மேலும், களைமுளைப்புத் திறனும் குறைக்கப்படுகிறது. கைக்களை எடுப்பதில் சிரமம்

ஏற்படுவதில்லை. எனவே இத்திட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் வட்டார விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்றார்.கூட்டத்தில் டிஆர்ஓ ரவீந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரஸ்வதி கணேசன், வேளாண் இணை இயக்குநர் (பொ) மனோகரன், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் கணேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**நீடாமங்கலத்தில் நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி ஏராளமான விவசாயிகள் பங்கேற்பு**

நீடாமங்கலம்: நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்ப 2 நாள் பயிற்சியில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். திருவாரூர் மாவட் டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் கரும்பு சாகுபடியில் அதிக விளைச்சல் பெறுவதற்கான புதிய தொழில் நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் பற்றிய இரண்டு நாள் பயிற்சி நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. முதல்நாள் பயிற்சியில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்தும், குழிதட்டு முறையில் நாற்றங்கால் அமைப்பது, நாற்றங்கால் பராமரிப்பு, ஊடுபயிர் சாகுபடி மூலம் கூடுதல் வருவாய் ஈட்டுவது மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி நிலையத்தின் உதவிபேராசிரியர் ராஜாரமேஷ் பயிற்சி அளித்தார். இரண்டாம் நாள் நடந்த செயல்முறை விளக்கப்பயிற்சிக்கு அம்மாபேட்டை வட்டாரத்தை சேர்ந்த சிக்கப்பட்டு கிராமத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் பயிரிட்டுள்ள கரும்பு வயலுக்கு விவசாயிகள் அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு நீர்பாசனம், தண்ணீர் சேமிப்பு, பராமரிப்பு, நோய் மேலாண்மை பற்றி கரும்பு ஆய்வாளர் பழனிராஜா பயிற்சி அளித்தார். கரும்பு சாகுபடி செய்யும் ஒரு பரு சீவல்களை மட்டுமே பயன்படுத்தி நாற்றங்கால் அமைத்து நடுவதால்

விதை கரணை செலவு குறைகிறது. இந்த முறையில் 25 முதல் 30 நாட்கள் வயதுடைய செழிப்பான நன்கு வளர்ச்சியடைந்த வாழிப்பான நாற்றங்காலை மட்டுமே பயன்படுத்துவதால் பயிர்கள் துரித வளர்ச்சி அடைந்து அதிக தூர்கள் கட்டுவதுடன் பூச்சி மற்றும் நோய்தாக்குதல் மிகவும் குறைவாகவும் இருப்பதால் அதிக மகசூல் கிடைக்கிறது. மேலும் வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியில் பயிரிடப்படுவதால் ஊடுபயிர் சாகுபடி செய்து கூடுதல் வருவாய் ஈட்டலாம் என அறிவுறுத்தப்பட்டது. பயிற்சியில் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**முறைகேடு மணல்குவாரியை ஆய்வு செய்ய விவசாய சங்கம் கோரிக்கை**

தரங்கம்பாடி, : நாகை மாவட்டம் பொறையார் அருகே காழியப்பன்நல்லூர் கிராமத்தில் இயங்கி வரும் தவுடு மணல் குவாரியின் முறைகேடு குறித்து நடவடிக்கை எடுக்க விவசாய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து, மகிமலையார் வெத்து வாய்க்கால் கடைமடை பாசன விவசாய சங்கம் சார்பில் விவசாய சங்க துணை செயலாளர் சிவக்குமார் நாகை கலெக்டருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் கிராமத்தில் தவுடு மணல் குவாரி 12 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அதில் தொடர்ந்து முறைகேடுகள் அரசு அணீதிகாரி உதவியுடன் நடந்து வருகிறது. இது குறித்து பலமுறை தங்கள் (கலெக்டர்) கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். தரங்கம்பாடியை சேர்ந்த ஒரு நபர் 8 வருடமாக பினாமிபெயரில் மணல்குவாரி நடத்தி வருகிறார். இவர் மீது பல முறைகேடு புகார் இருந்தும் இவருக்கு குவாரி நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது மணல் குவாரியில் 40 அடி ஆழம் வரை மணல் அள்ளப்பட்டு புதுவை மாநிலம் காரைக்கால் பக்கம் உள்ள வரிச்சிக்குடியில் மணல் சேமிக்கப்பட்டு வருகிறது. 40 அடி ஆழம் மணல் அள்ளுவதற்கு உடந்தையாக அதிகாரி இருந்துள்ளார். மேலும் விவசாய சங்க நிர்வாகி முன்னிலையில் சம்மந்தப்பட்ட மணல் குவாரியை ஆய்வு செய்து

நடந்துள்ள முறைகேடுகளை விவசாய சங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு இடுபொருட்கள், பயிர்க்கடன் கலெக்டர் தலைமையில் ஆலோசனை கூட்டம்**

ஈரோடு, : விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் விதை நெல், உரம் போன்றவற்றை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் இருப்பு வைத்து தடையின்றி விநியோகம் செய்வது தொடர்பாகவும், பயிர்க்கடன் வழங்குவது தொடர்பாகவும் ஆய்வுக்கூட்டம் நேற்று ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இந்த கூட்டத்தில் கலெக்டர் பிரபாகர் தலைமை தாங்கி பேசுகையில், 'மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்கு நடப்பு பருவத்திற்கு தேவையான இடுபொருட்களான விதைநெல், உரங்கள் போன்றவை இருப்பு வைத்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நடப்பு தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளுக்கும், எதிர்வரும் நாட்களில் கீழ்பவானி பாசன பகுதிக்கும் ஏற்ற நெல் ரகங்களான ஏ.எஸ்.டி.16, கோ-50, கோ-51, ஏ.டி.டி-39, கோ-43, ஏ.டி.டி.38, ஏ.டி.டி.50, வெள்ளை பொன்னி, கோ-48, கோ-49, ஏ.டி.டி.44 போன்ற ரங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கட்டாயமாக விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் மருந்தினை விதை நேர்த்தி செய்துதான் விதைக்க வேண்டும்.

மேலும் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை தங்கள் பகுதி வேளாண்துறை களப்பணியாளர்களை அணுகி பயன் பெற கேட்டுக் கொண்டுள்ளார். இந்த கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்

(வேளாண்மை) விஸ்வநாதன் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**பசுந்தேயிலைக்கு மாறுபட்ட விலை**

குன்னூர்: பசுந்தேயிலைக்கு ஒருசில ஆலைகள் ரூ.1 அதிகரித்தும் மேலும் சில ஆலைகள் ரூ.1 குறைத்தும் வழங்கியுள்ளனர். இந்த மாறுபட்ட விலையால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதில் ஏல மையங்களில் வாரந்தோறும் விற்பனையாகும் தேயிலை தூளின் விலைக்கு ஏற்றார்போல் பசுந்தேயிலைக்கு விலையை விவசாயிகளுக்கு உற்பத்தியாளர்கள் வழங்கி வருகின்றனர். ஆனால், பெரும்பாலான தொழிற்சாலைகள் உரிய விலை வழங்குவது இல்லை என விவசாயிகள் புகாரை கூறி வந்தனர். இதனையடுத்து, தேயிலை வாரியத்தின் சார்பில் விலை பகிர்வு திட்டம் அமல் படுத்தப்பட்டது. ஆனால் இதனையும் ஒரு சில உற்பத்தியாளர்கள் பின்பற்றுவது இல்லை. தற்போது மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.இதனால், ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளின் வரத்தும் கூடுதலாகி விடுகிறது. இதனால் 30 சதவிகித தேயிலை தூள் தேக்கம் அடைவதுடன் விலையும் குறைந்து வருகிறது. இதன் காரணமாக பசுந்தேயிலைக்கு உண்டான விலையில் சரிவு ஏற்பட்டு வந்தது. இந்நிலையில். இந்த வாரம் அனைத்து ரக பசுந்தேயிலைக்கும் ரூ.1 வரை விலை உயர்த்தி ஒரு சில தொழிற்சாலைகளில் வழங்கப்பட்டுள்ளது. சில தொழிற்சாலைகளில் ரூ.1 விலை குறைத்து வழங்கப்படுகிறது. இதுபோல் மாறுபட்ட விலை வழங்கி வருவதால் விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அதன்படி சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.9, நடுத்தரத்திற்கு ரூ.15, உயர் ரகத்திற்கு ரூ.17 வழங்கப்பட்டுள்ளது. மகசூல் அதிகரித்து வரும்

நிலையில் பசுந்தேயிலையின் விலை மேலும் உயர்ந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும்.

**இரண்டாவது சீசனுக்காக ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர்ச்செடிகள் பராமரிப்பு பணி தீவிரம்**

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவில் இரண்டாவது சீசனுக்காக நடவு செய்யப்பட்ட மலர் செடிகளை பராமரிக்கும் பணியில் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஊட்டியில் இரண்டாம் சீசன் செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை கொண்டாடப்படுகிறது. இச்சமயங்களில் சாதாரண நாட்களில் வரும் சுற்றுலா பயணிகள் வரத்தை காட்டிலும் சற்று அதிகமாக காணப்படும். குறிப்பாக வெளிநாடு, வெளி மாநில சுற்றுலா பயணிகள் மற்றும் தேனிநிலவு தம்பதிகள் அதிகளவு வருவார்கள். இச்சமயங்களில் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக ஊட்டியில் உள்ள பூங்காக்களில் மலர்ச்செடிகள் நடவு பணி நடந்தது. தாவரவியல் பூங்காவில் கடந்த மாதம் 16ம் தேதி மலர் செடிகள் நடவு பணிகள் துவங்கப்பட்டது. பூங்காவின் பல்வேறு பகுதிகளில் உள்ள பாத்திகளில் இன்கா மோிகோல்டு, பிரெஞ்ச் மோிகோல்டு, ஆஸ்டர், வெர்பினா, லூபினா, கேன்டிப்ட், காஸ்மாஸ், பாப்பி, லைனோியா, ஸ்வீட் வில்லியம், மைமுலஸ், சைனாகிளாசம், அஜிரேட்டம், கிரைசாந்திமம், கேலண்டுலா, ஹெலிக்ரைசம், சப்பனோியா, பெட்டூனியா உள்ளிட்ட 70 வகையான 2.50 லட்சம் புதிய மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 6 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு வண்ண மலர்கள் நடவு செய்யப்பட்டன.

நடவு செய்யப்பட்ட மலர் செடிகள் தற்போது துளிர் விட துவங்கியுள்ளன. பாத்திகள், தொட்டிகளில் நடவு செய்யப்பட்டுள்ள மலர்செடிகளை பராமரிக்கும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது. தொட்டிகள், பாத்திகளில் மலர் செடிகள் வளர இடையூறாக வளர்ந்துள்ள களை செடிகளையும் அகற்றும் பணிகளில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு

வருகின்றனர்.தற்போது அவ்வப்போது ஊட்டியில் லேசான சாரல் மழை பெய்து வருவதால், பாத்திகளில் நடவு செய்யப்பட்டுள்ள மலர் செடிகள் செழித்து வளர துவங்கியுள்ளன. இதனால் இரண்டாவது சீசனுக்கு ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஏராளமான மலர்ச் செடிகள் பூத்து குலுங்கும் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

**மாவட்ட விவசாயிகள் ஆர்வம் சோலார் மின்மோட்டார் மூலம் காய்கறி சாகுபடி செய்வது அதிகரிப்பு**

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில் சோலார் (சூா்ியஒளி) மின்சாரத்தின் மூலம் மோட்டார்களை இயக்கி தண்ணீர் பாய்ச்சி காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுவது அதிகா்ித்துள்ளது. 80 சதவீத மானிய விலையில் சோலார் மின்தகடுகள் பொருத்திக் கொடுக்க தோட்டக்கலைத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஜூன் மாதம் துவங்கி நவம்பர் மாதம் வரை மேக மூட்டம் மற்றும் சாரல் மழை பெய்யும். இச்சமயங்களில் எந்த ஒரு பணிகளையும் நீலகிரியில் மேற்கொள்ள முடியாது. குறிப்பாக, கட்டுமான பணி நடக்காது. அதே சமயம் அனைத்து பகுதிகளிலும் விவசாயம் செய்ய முடியும். அதன்பின், டிசம்பர் மாதம் முதல் மே மாதம் வரை நீலகிரியில் பனி மற்றும் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படும். இந்த சமயத்தில் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கும் என்பதால் விவசாயம் மேற்கொள்வது கடினமாகும். அப்போது, விவசாயம் செய்ய கிணற்று நீரை விவசாயிகள் பயன்படுத்துவது வழக்கம். அதிலும் குறிப்பாக, மலைப் பாங்கான பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ள வேண்டுமாயின் மின் மோட்டார், டீசல் மோட்டார் ஆகியவைகளை பயன்படுத்தியே தண்ணீர் பாய்ச்ச முடியும். மோட்டாா்ை பயன்படுத்தி காய்கறி பயிா்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதால் விவசாயிகளுக்கு உற்பத்தி செலவு அதிகரிக்கிறது. இந்நிலையில், விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டு, வேளாண் பொறியியல் துறை சார்பில், தோட்டக்கலைத் துறை மூலம்

முதற்கட்டமாக கடந்த ஆண்டு 11 விவசாயிகளுக்கு, அவர்களது விளைநிலங்களில் சோலா◌ா◌ மின் உற்பத்தி தகடு பொருத்தி தரப்பட்டுள்ளது.அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம் மோட்டா◌ா–◌களை இயக்கி விவசாயிகள் தங்களது தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். மின்மோட்டார் மற்றும் டீசல் மோட்டார்களை கொண்டு இயக்கினால் செலவு அதிகம் என நினைத்து விவசாயம் செய்யாமல் இருந்த, விவசாயிகள் தற்போது மானிய விலையில் வழக்கப்பட்டுள்ள சோலார் மின் கருவிகளைப் பயன்படுத்தி ◌ோமாட்டார்களை இயக்கி காய்கறி பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

சோலார் மின்தகடுகளை பொருத்தி ஒரு மோட்டாரை இயக்கச் செய்வதற்கு மொத்தம் ரூ.5 லட்சத்து 87 ஆயிரத்து 215 செலவாகிறது. இதில் விவசாயி ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 543 செலுத்த வேண்டும். மீதமுள்ள 80 சதவீத பணம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றி பெற்றுள்ள நிலையில் தற்போது, சோலா◌ா◌ மின்சாரம் மூலம் மோட்டாரை இயக்கி விவசாய பணிகள் மேற்கொள்ள விவசாயிகள் மத்தியில் ஆர்வம் அதிகா◌ித்துள்ளது. விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ள இந்த சோலார் மின் கருவிகளை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என நீலகிரி மாவட்டத்தில் உள்ள காய்கறி விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை தொடர்ந்து சோலா◌ா◌ மின்சாரம் மூலம் காய்கறி உற்பத்தி செய்வதற்கு வசதியாக விவசாயிகளின் தோட்டங்களில் சோலா◌ா◌ மின் உற்பத்தி தகடுகளை பொருத்தித் தரும் திட்டத்தை விரிவுப்படுத்த தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மணி கூறியதாவது: 2014-15ம் ஆண்டில் மின்மோட்டார் இயக்க சோலார் மின் தகடுகள் பொருத்தித் தருமாறு 18 விவசாயிகள் விண்ணப்பித்து இருந்தனர். அவர்களில் 11 பேருக்கு பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

துவக்கத்தில் இது சாத்தியமாகுமா என்ற சந்தேகத்தில் குறைந்த விவசாயிகளே விண்ணப்பித்தனர். தற்போது சிறப்பாக சோலார் மின்சாரம் மூலம் மோட்டார்கள் இயக்கப்படுவதாலும் பெருமளவில் பணம் மிச்சமாகுவதாலும் இந்த ஆண்டு (2015-16) நிறைய விவசாயிகள் விண்ணப்பித்தபடி உள்ளனர். அவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பயனடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு இணை இயக்குனர் மணி தெரிவித்தார்.

**விவசாயிக்கு நில கிரய பத்திரம் வழங்காததால் ரூ.10 ஆயிரம் இழப்பீட்டை சார்பதிவாளர் வழங்க வேண்டும் நுகர்வோர் கோர்ட் உத்தரவு**

பெரம்பலூர், : குன்னம் அருகே விவசாயிக்கு நில கிரய பத்திரம் வழங்காததால் இழப்பீட்டு தொகை ரூ.10,000 வழங்க ேவண்டுமென பெரம்பலூர் சார்பதிவாளருக்கு நுகர்வோர் கோர்ட் உத்தரவிட்டது.பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தாலுகா சிறுகுடல் கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி கருணாநிதி (48). இவர் அதே ஊரை சேர்ந்த தங்கம்மாள் மற்றும் வாரிசுகளிடமிருந்து பூர்வீக பாத்திய நிலம் வாங்கியிருந்தார். நிலம் கிரயம் செய்ததற்கான சொத்து, பெரம்பலூரில் உள்ள பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகத்தில் 2012ம் ஆண்டு மார்ச் 9ம் தேதி பதிவு செய்யப்பட்டது. இதற்காக பதிவு கட்டணம் ரூ.5,135 முறையாக செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் பத்திரப்பதிவு செய்யப்பட்டதற்கான சொத்து கிரய பத்திரத்தை கருணாநிதிக்கு உடனே வழங்காமல் சார்பதிவாளர் காலம்தாழ்த்தி வந்துள்ளார். சார்பதிவாளர் அலுவலகத்தை பலமுறை அணுகியும், கருணாநிதிக்கு பத்திரம் வழங்கப்படாமல் இழுத்தடித்துள்ளார். இதனால் மனமுடைந்து மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் பெரம்பலூர் சார்பதிவாளர், அரியலூர் மாவட்ட பத்திரப்பதிவு அதிகாரி மற்றும் தமிழ்நாடு அரசு பதிவுத்துறை தலைவர் ஆகியோர் மீது கருணாநிதி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை நுகர்வோர் நீதிமன்ற தலைவர் கலியமூர்த்தி, உறுப்பினர்கள் அன்பழகன், ஜயலட்சுமி ஆகியோர் கொண்ட குழுவினர் விசாரித்தனர்.

இதைதொடர்ந்து கருணாநிதிக்கு உரிய நேரத்தில் பத்திரம் வழங்காமல் அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியதால் ரூ.10 ஆயிரம் இழப்பீடு, வழக்கு செலவுக்காக ரூ.3 ஆயிரம் வழங்க சார்பதிவாளருக்கு உத்தரவிட்டனர். மேலும் கருணாநிதிக்கு உரிய கிரய பத்திரத்தை ஒரு மாதத்துக்குள் வழங்கவும், நஷ்டஈட்டை 2 மாதத்துக்குள் வழங்கவும் சார்பதிவாளருக்கு உத்தரவிட்டனர்.

**மலட்டுத்தன்மையை போக்கும் முருங்கை**

முருங்கை உடலுக்கு பல்வேறு நன்மைகளை தரக்கூடியது. எண்ணற்ற பயன்களை கொண்ட முருங்கையின் மகத்துவத்தை பற்றி நாம் தெரிந்துகொள்வோம். முருகன் கை காய் என்பதே முருங்கைகாய் என்று முன்னோர்கள் அழைத்தார்கள். முருகனுக்கு உகந்த கிருத்திகை போன்ற விஷேச நாட்களில் முருங்கை கீரையை வைத்து முருகப் பெருமானை வழிபாடு செய்வர். உடலுக்கு நன்மை பயக்கும் பல்வேறு சத்துக்கள் முருங்கையில் உள்ளன. முருங்கை பூ, கீரை, பட்டை, காம்பு, பிஞ்சு என அனைத்தும் மருத்துவ குணம் கொண்டவை. பல்வேறு சிறப்புகளை கொண்ட முருங்கை உடலுக்கு எதிர்ப்பு சக்தியை கொடுக்க கூடியது. முருங்கை பிஞ்சை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, அதனுடன் அரை ஸ்பூன் நெய் விட்டு வதக்க வேண்டும். பின்னர், தேவையான அளவு உப்பு, நீர் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். சிறிதளவு மிளகு பொடியை சேர்த்துக் கொள்ளவும். இதை சாப்பிட்டு வந்தால் தூக்கத்தில் விந்து வெளியாகுதல், சிறுநீர் கழிக்கும்போது விந்து வெளியாவது தவிர்க்கப்படும். விந்து கெட்டிப்படும். மலட்டுத்தன்மை மாறும்.முருங்கை பிசினை நெல்லிக்காய் அளவுக்கு எடுத்துக் கொண்டு இரவு முழுவதும் ஊரவைத்து காலையில் சாப்பிடுவது உடலுக்கு நல்லது. முருங்கை

கீரையில் பாஸ்பரஸ் சத்து அதிகம் உள்ளது. முருங்கை கீரை சாப்பிட்டால் ரத்தசோகை சரியாகும். முருங்கை பட்டையில் இருந்து சாறு எடுத்து, அவற்றுடன் எலுமிச்சை சாறு, தேன் சேர்க்க வேண்டும். பின்னர் நீர்விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்க வேண்டும். இது சளியை கரைக்கும் தன்மை கொண்டது. இருமலை தடுக்க கூடியது. சுவாச பாதை வீக்கத்தை வற்ற வைக்கும். ஆஸ்துமாவுக்கு நல்லது. வைட்டமின் சி சத்து அதிகம் உள்ளது முருங்கை. எலும்புக்கு வலு சேர்க்க கூடியது. முருங்கை கீரை உடலுக்கு பலத்தை கொடுக்க கூடியது. ரத்த ஓட்டத்தை சீராக்கும் தன்மை கொண்டவை. நார்சத்துமிக்க இந்த முருங்கையால் மலச்சிக்கல் தீரும். முருங்கை பிசின் உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. புத்துணர்வை கொடுக்க கூடியது. புற்றுநோயை தடுக்கும் தன்மை கொண்டது.

**நலம் பயக்கும் சித்தரத்தை**

நமது சித்த மருத்துவத்தில் ஏராளமான மூலிகைகளுக்கு சிறப்பான இடம் உள்ளது. உடலில் ஏற்படும் நோய்களை பொறுத்து அவற்றின் தனிப்பட்ட குணங்களுக்கு ஏற்ப பயன்படுத்தி வருகிறோம். அந்த வகையில் சித்தரத்தையின் பயன்பாடு பற்றி பார்ப்போம்: நம்மிடையே காணப்படும் சைனஸ் தொல்லை, சளி தொந்தரவு, வயிற்று கடுப்பு, வயிற்று கோளாறு மற்றும் வாயு கோளாறுகளை அகற்ற சித்தரத்தை மிகவும் பயன்படுகிறது.சித்தரத்தை, நமது உடலில் உள்ள கொழுப்பை குறைக்க உதவுகிறது. அத்துடன், புற்றுநோய் மற்றும் பிளட் பிரஷர் தாக்கத்தை வெகுவாக குறைக்கிறது. நாட்டு மருந்து கடைகளில் சித்தரத்தை காய்ந்த கிழங்காகவும் பொடியாகவும் கிடைக்கிறது. அரை டீஸ்பூன் சித்தரத்தை பொடியுடன், அதிமதுர பொடி அரை டீஸ்பூன், சுக்கு, மிளகு, திப்பிலி அடங்கிய திரிகடுக பொடி அரை டீஸ்பூன் கலந்து, அரை லிட்டர் தண்ணீரில் கொதிக்க விடவும். பின்னர், நன்கு கொதி வந்ததும் இறக்கி வடிகட்டவும். அவை காரமாக இருக்கும்

என்பதால், அவற்றுடன் சிறிது தேனை கலந்து குடிக்கலாம்.இவற்றை தொடர்ச்சியாக குடித்து வந்தால் மூக்கடைப்பு, நெஞ்சக சளி, ஒற்றை தலைவலி உட்பட சைனஸ் தொந்தரவுகள் அறவே நீங்கும். அதேபோல், இவை நம்மிடம் உள்ள கொழுப்பு சத்தை கரைக்கவும், பிளட் பிரஷரை குறைக்கவும் உதவுகிறது. மேலும், நம்மிடையே காணப்படும் நாக்கு வறட்சியை அறவே நீக்கும்.கால் டீஸ்பூன் சித்தரத்தை பொடியுடன் 4 பல் பூண்டு, ஒன்றரை டீஸ்பூன் சோம்பு மற்றும் அரை டீஸ்பூன் சர்க்கரையுடன் சேர்த்து கொதிக்க விடவும். பின்னர் வடிகட்டி, அத்துடன் தேன் கலந்து குடிக்கலாம். இவற்றை தொடர்ச்சியாக குடித்து வந்தால் வயிற்றுக் கோளாறு, வயிற்று புண், வாயு கோளாறு உள்ளிட்ட பல்வேறு நெஞ்சக கோளாறுகள் நீங்கும். விந்தணுக்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் ஆற்றலும் இதற்கு உண்டு.

**எலும்பு தேய்மானம் தடுக்கும் சூரிய ஒளி !**

எலும்பு என்பது மனிதனின் உடலில் காணப்படும் விறைப்பான, கடினத்தன்மை கொண்ட உறுப்பாகும். உடல் உள் உறுப்புகளுக்கு பாதுகாப்பாக அமைந்து உடலை தாங்கும் உறுப்புகள்தான் எலும்புகள். மனிதனின் உடலமைப்பை நிர்ணயம் செய்வதும் எலும்புகளே. இதில் ரத்த சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள், குருதிச் சிறுதட்டுகள் போன்ற முக்கிய ரத்த உறுப்புகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவும் அமைந்துள்ளன.

மேலும் கனிமங்களை சேகரித்து வைக்கும் சேமிப்பு கூடமாகவும் எலும்புகள் உள்ளன.பொதுவாக எலும்புகள் பலவகையான வடிவங்களில் அமைந்துள்ளன. இவற்றில் சில சிறியனவாகவும், பெரியனவாகவும் காணப்படும். அது போல் மிகவும் உறுதியான எலும்புகளும் உறுதி குறைந்த எலும்புகளும் உள்ளன. இவை மனிதனின் அனைத்து உறுப்புகளையும் பாதுகாப்பதற்கு தகுந்தவாறு

அமைந்துள்ளன.எலும்பை உருவாக்கும் திசுக்களில் ஒருவகை கனிமங்கள் நிறைந்துள்ளன. இவை தேன் கூட்டு அமைப்பை ஒத்துக்காணப்படும் முப்பரிமாண உள்ளமைப்புகளை கொண்டு எலும்புகளுக்கு விறைப்பு தன்மையை கொடுப்பது எலும்புத் திசுக்கள்தான். மேலும் எலும்புகளில் எலும்பு மஜ்ஜை, எண் புழை, நரம்பு,ரத்த அணுக்கள், குருத்தெலும்பு போன்றவை அடங்கும். எலும்புகள் உடலுக்கு ஆதாரமாக இருப்பதுடன் தசை நரம்புகளுக்கு பற்றுக் கோளாகவும் அமைந்துள்ளது.மூளை, கண், இதயம், நுரையீரல் போன்ற மென்மையான உறுப்புகளுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு ஏற்றவாறு எலும்புகள் அமைந்துள்ளன. இந்த எலும்புகளில் 50 சதவீதம் நீரும், 33 சதவீதம் உப்புக்களும் 17 சதவீதம் மற்ற பொருட்களும் அடங்கியுள்ளன. எலும்பில் கால்சியம், பாஸ்பேட் போன்ற அமிலத்தில் கரையக் கூடிய தாதுப் பொருட்கள் நிறைந்துள்ளன. நமது உடல் நலத்திற்குத் தேவையான கால்சியம் சத்துக்கள் அனைத்தும் எலும்புகளில்தான் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த கால்சியம் சத்துக் குறைந்தால் எலும்புகள் பலமிழந்து எளிதில் உடைந்துவிடும். எலும்பு தேய்மானம்மனிதன் முதுமை அடையும்போது உடல் உறுப்புகளில் ஏற்படும் செயல் மாற்றங்களினால் எலும்புகளும் சேதமடைய ஆரம்பிக்கின்றன. இதனை நாம் நமக்கு ஏற்படும் பக்க விளைவுகளில் இருந்து உணர முடியும்.

வயது செல்லச் செல்ல தேய்வுகள் அதிகமாகி நோயின் தீவிரம் மனிதனை முடக்கும்.எலும்புகள் உறுதியானதாக அமைய முக்கியமாக கால்சியம் என்ற தாது உப்பு அவசியமாகிறது. இந்த தாது உப்பை நாம் உண்ணும் உணவில் இருந்து எலும்புகள் எடுத்துக்கொள்ளுகின்றன. நாம் முதுமையை நெருங்க நெருங்க இத்தன்மை மெதுவாக குறைந்து விடுவதால் எலும்புகளில் கால்சிய குறைபாடு காரணமாக தேய்மானம் ஏற்படுகிறது.

எலும்பில் உள்ள மினரல் அடர்த்தி குறைந்து எலும்புகள் பலவீனமடைந்து சிறு விபத்தானால் எலும்பு முறிவு ஏற்படும். இதுவே எலும்பு தேய்மானம் ஆகும். காரணங்கள்ஆண்களில் வயதானவர்களையும், பெண்களுக்கு மாதவிடாய் நின்று மெனோபாஸ் காலத்திலும் எலும்பு தேய்மான நோய் பாதிக்கிறது. பொதுவாக 45 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் எலும்பு தேய்மான நோய் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நோய் ஏற்பட்டால் எலும்பு கிட்டத்தட்ட பஞ்சு போல் ஆகிவிடும்.உடலில் கால்சியம் சத்து குறைவதும், வைட்டமின் “D” குறைபாடும் ஏற்படும். ஆண்களை பொறுத்தவரை புகைப்பழக்கம், குடிப்பழக்கம், உடற்பயிற்சி இன்மை, கால்சியம் குறைவான உணவுப் பழக்க முறை ஆகியவை எலும்பு தேய்மான நோய்க்கு முக்கிய காரணமாகும். மெனோபாஸ் பருவம்பெண்களுக்கு மாதவிடாய் காலம் முடிந்த பிறகு ஈஸ்ட்ரோஜென் உடலில் குறைந்து விடுவதால் பெண்களை இது அதிகம் பாதிக்கிறது. முக்கியமாக பெண்களில் “மெனோபாஸ்” எனும் மாதவிடாய் நிரந்தரமாக நின்று போகும் காலகட்டங்களில் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாறுபாடுகளால் எலும்புகளில் கால்சியம் உப்பை சேகரித்து வைக்கும் பண்புகள் வலுவிழந்து விடுவதால் இந்த குறைபாடு ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக மெனோபாஸ் காலத்தில் பலர் கர்ப்பப்பையை அகற்றுவதும் எலும்பு தேய்மானம் ஏற்பட காரணமாகிறது. வைட்டமின் “D” குறைபாடுகிராமப்புறங்களில் குழந்தைப்பருவம் முதலே கால்சியம் சத்தில்லாத உணவுப்பழக்க வழக்கம் இருந்து வருகிறது. மேலும் குழந்தைகளுக்கு பால் சத்து குறைவதும் எலும்பு தேய்மானத்துக்கு காரணமாகும்.வைட்டமின் ‘டி’ குறைவு, ஊட்டச்சத்தில்லாத உணவு, வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது, வேலை இல்லாமல் உட்கார்ந்தபடியே இருப்பது மற்றும் மரபுக்காரணங்களாலும் எலும்புத் தேய்மானம் ஏற்படுகிறது. குளிர்பானம் குடித்தல்: குழந்தைகள்

குளிர்பானங்களை அதிகம் விரும்புகின்றனர். பாட்டில் மற்றும் டின்களில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களில் பொஸ்பேட் சத்து அதிகமாக உள்ளது. பொஸ்பேட்டுகள் அதிகமானால் எலும்புகளுக்கு செல்லும் கால்சியம் சத்து குறையும். எனவே சிறு வயதில் இருந்தே குளிப்பானங்களை குடிக்கக்கூடாது. சிறுவயதில் இருந்தே உடற்பயிற்சி செய்வதன் மூலம் கால்சியம் அளவைத் தக்கவைக்க முடியும்.

**முன்னோர் வழங்கிய மூலிகை: நாவல்**

நாவற்பழம் என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது, அவ்வை பாட்டியிடம் தமிழ்க்கடவுள் முருகன் கேட்ட சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்ற கதை தான். நாவல் பழத்தை இளமைபருத்தில் சுவைக்காதவர்களே இருக்க முடியாது.இனிப்பும் புளிப்பும் கலந்துது வர்ப்புசுவையுடன் நம்மை பிடித்து இழுக்கும். அதிகம் சாப்பிட்டால் தொண்டை கட்டிக்கொள்ளும் என தெரிந்தும் சாப்பிட்டு அவதிப்படுவோர்கள் உண்டு. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தானாக வேவளரும் தன்மை கொண்டது. இதன் இலைகள் கூர்மையானதாக இருக்கும். வெவ்வேறு அளவுகள் கொண்ட இலைகள் வழவழப்பாக அமைந்திருக்கும். நாவற்பழம் கருமை கலந்துசிவந்த நிறத்தில் உருளைவடிவத்தில் இருக்கும். தளர்ச்சி அடைந்த நாடி நரம்புகளை ஊக்கப்படுத்தும்.இதன் துவர்ப்புரத்தத்தை உண்டாக்கும். தாதுக்களை உரமாக்கும். பழம் குளிர்ச்சி தரும்.

தற்காலத்தில் பெரும்பாடாகபடுத்தி வரும் சர்க்கரைநோய் என்ற நீரிழிவை போக்கும் திறன் படைத்தது. நாவல்பழத்தை உண்பதால் வளிநோய்கள், கரப்பான், புண், நீரிழிவு, குருதிக்கழிச்சல், சுரம் ஆகியவை நீங்கும்.இதில் வெள்ளைநாவல், கொடிநாவல், குழிநாவல், கருநாவல், சம்புநாவல் என பல வகையுண்டு. நாவல் கொழுந்துசாறு ஒரு

தேக்கரண்டி இரண்டு ஏலக்காய், லவங்கபட்டைத் தூள் மிளகு அளவு சேர்த்து சாப்பிட சூட்டினால் ஏற்பட்ட கழிச்சல் நிற்கும். செரியரிமை தன்மை மாறி உணவு செரிக்கும். வெள்ளைநாவல் பழத்தை சாப்பிட்டு வரரத்தத்தை பெருக்கும். உடலின் உள்வெப்பத்தை தணிக்கும்.கருநாவல் பழத்தின் சாற்றை பிழிந்து எடுத்து ஒரு கண்ணாடி பாட்டிலில் ஒரு மாதம் வரை மூடி வைத்திருந்து அதன்பின் அதை எடுத்து 15மிலி அளவில் காலையில் குடித்து வந்தால் நீரிழிவு குறைபாட்டால் உண்டான நீர் வேட்கை நீங்கும்.சம்புநாவல் பழத்தை சாப்பிட்டு வர நீர்வேட்கையை தணிக்கும்.உடலில் அதிக வெப்பத்தை உண்டாக்கும். விதையைதூள் செய்து வேளைக்கு 2 முதல் 4கிராம் வரை நீரிழிவு நோயாளிக்கு கொடுக்கரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்து குணம் ஏற்படும். நாவல்பட்டை , அதே அளவுமாம்பட்டை எடுத்து இடித்து மண்சட்டியில் போட்டு 1 லிட்டர் தண்ணீர் கால் லிட்டராக சுண்டும் வரை கசாயம் செய்து அதில் 30மிலி அளவில் காலை மாலை குடித்து வந்தால் ஆசன எரிச்சல் குணமாகும். இந்த கசாயத்தில் வாய் கொப்பளிக்க வாய்ப்புண் குணமாகும். நோய் குணமாகும் வரை புதியதாக செய்து வரவேண்டும். நாவல் பட்டையை மட்டும் தனியாக எடுத்து கசாயம் செய்து 30மிலி அளவில் 6நாட்கள் காலை மாலை குடித்துவந்தால் ஆறாத புண்கள் ஆறும். பட்டையின் சாம்பலை புண்கள் மீது போட்டு வந்தாலும் புண்கள் ஆறும்.சிலர் ஆவல் காரணமாக ஏதாவது உணவை அளவுக்கதிகமாக சாப்பிட்டு அது செரிக்காமல் கழிச்சல் ஏற்படும். இவர்கள்நாவற் கொழுந்து இலையை ஏலத்துடன் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலில் கலந்து குடித்தால் கழிச்சலை நிறுத்தும். பட்டையை தூள் செய்து அதனுடன் சமஅளவு மாம்பருப்புத் தூளையும் சேர்த்து சாப்பிட சிறுநீரை பெருக்கும். 4 இதன் விதையை நீரிழிவுக்கு நன்மை தரும் என்ற போதிலும் அதிகமாக சாப்பிட்டால் நஞ்சாகும். சீதக்கழிச்சல் ஏற்பட்டவர்களுக்கு நாவற் கொழுந்து இலைசாறு, மா விலைச்சாறு

இரண்டையும் 50மிலி அளவில் தனித்தனியாக எடுத்து அதில் சிட்டிகையளவு கடுக்காய் பொடியை சேர்த்து,காய்ச்சிய ஆட்டுபாலுடன் கலந்து குடிக்ககொடுத்தால் சீதளகழிச்சல் உடனடியாக நிறுத்தும்.முன்னோர் வழங்கிய மூலிகை: திருநீற்றுப்பச்சிலை